நிதித்துறையிலிருந்து வந்துள்ள விளக்கத்தைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண். 43—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்படவேண்டிய தொகை தமிழ்நாடு குடி நீர் வாரியத்திற்கு மாற்றப்பட்டுவிட்டபடியால் இந்தத் தலைப்பின்கீழ் நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. மானியக் கோரிக்கை எண். 43 வாக்கெடுப்பிற்கு வைக்கப்படும் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

3. தீர்மானம்

பேரவை உறுப்பினர் திரு. மு. பழனிச்சாமி அவர்களுக்கு விடுப்பு அளிப்பது குறித்து

திரு. து. ப. அழகமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "இப்பேரவையின் வெள்ளக்கோயில் உறுப்பினர் திரு. மு. பழனிச்சாமி பேரவைக்கு வராத நாளிலிருந்து, அதாவது 1973-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ம் நாளிலிருந்து 1973-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் நாள் முடிய விடுப்பு அளிக்க வேண்டும்." இத்தீர்மானத்தை பேரவையின் 15-வது விதியின் கீழ் முன்மொழிகிறேன்.

திரு. செ. கந்தப்பன் : நான் அதை வழிமொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It would be better if the reason is also given. Otherwise, it may become a bad precedent and other members also may take undue advantage.

திரு. து. ப. அழகமுத்து : விபத்துக்கு ஆளாகி அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த விடுப்பு பேரவையின் 15-வது விதியின் கீழ் என்று சொல்லியிருக்கிறார்கள். "அதில் such motion shall be voted upon without amendment or debate" என்று இருக்கிறது. ஆகவே, அதை நாம் விவாதிக்காமல் இருப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

4. 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. என். கே. பழனிசாமி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அறிக்கை இந்தச் சர்க்கார் சமர்ப்பிக்கக்கூடிய 7-வது பட்ஜெட். போன வருடம் ரூ. 441 கோடியாக இருந்த வருமானம் இந்த ஆண்டு ரூ. 465 கோடியாக இருக்கிறது. இந்த ஆண்டு 24 கோடி ரூபாய் உபரியாக வருமானம் வருகிறது. சர்க்கார் வரி போடவில்லை. எந்த விதத்தில் இந்த 24 கோடி ரூபாயை மக்கள் அதிகமாகக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால் அது சர்க்கார் திறமையால் வாங்கக்கூடிய பணம் என்றுதான் சொல்ல முடியும். 1973-74 வருவுத்தில் வருமானம் ரூ. 465 கோடி என்று சொன்னால், அதில் மத்திய சர்க்காரிலிருந்து வரும் பணம், ஜனங்களிடத்தில் வாங்கிய கடன் ரூ. 23 கோடி, நேஷனலைசுடு பாங்கிலிருந்து வாங்கிய கடன் ரூ. 18 கோடி, எல்.ஐ.ஸி. விடத்திலிருந்து வாங்கிய ரூ. 48 கோடி கடன், இவைகளெல்லாம் அதில் சேர்க்கப்படவில்லை. அப்படிச் சேர்த்தால் இந்த வருடத்தில் வருமானம் ரூ. 600 கோடிக்கு மேல் இருக்கும். 1966-67-ல் ரூ. 224 கோடியாக இருந்த வருமானம் இன்றைக்குக் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்து இருக்கிறது.

இவ்வளவு வருமானம் அதிகரித்து இருக்கிற நேரத்தில், இந்தச் சர்க்கார் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி, கண்ணொளி வழங்கும் நிதி போன்ற மிஸ்ஸலேனியஸ் ஆக்டிவிடீஸ் போன்றவற்றிற்கும் நிதி வசூலித்து நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. அதை நான் வரவேற்கிறேன். மற்றும் பங்கிங்காம் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டத்தையும் நான் வரவேற்றபோதிலும், மக்களை ஆகர்ஷிக்கக்கூடிய, உற்பத்தியைப் பெருக்கும் பெரிய தொழிற் சாலைகளையோ, அணைக்கட்டுத் திட்டங்களையோ இந்த அரசு ஏற்படுத்தவில்லை, இவ்வளவு பணம் வந்தும் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், இந்த அரசு கேரளாவிலுள்ள சர்க்காரோடு கலந்து பேசி, அனுகி. மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கும் இர்ரிகேஷன் சோர்ஸ், பாசன வசதியை உபயோகித்துக் கொண்டிருக்க முடியும். அதே போன்று இன்னும் பரம்பிக்குளம்-ஆளியாறு-லோயர் பவானி போன்ற திட்டங்களையும் பூர்த்தி செய்யவில்லை. அதற்குப் பதிலாக இதுவரையில் திட்டமே